# மெக்னம் நிறுவனம் பொன்விழா கொண்டாடியது

# கடைகளின் புதிய தோற்றம், புதிய சின்னம் அறிமுகம்

சூரியகுமார் முருகன்
படம்: பார்த்திபன்




கோலாலம்பூர், ஜன. 10-

மெக்னம் நிறுவனம் (மெக்னம்) இன்று ஐம்பதாவது ஆண்டு விழாவை கோலாலம்பூரில் அமைந்துள்ள ஒரு விடுதியில் வெகு விமரிசையாகக் கொண்டாடியது. மலேசியாவில் 4 இலக்க எண்கள் (4D) பந்தய விளையாட்டை நடத்துவதற்கான உரிமம் வழங்கப்பட்ட முதல் தனியார் நிறுவனம் மெக்னம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விழாவில் 700க்கும் மேற்பட்ட வணிக நண்பர்கள், முகவர்கள், மெக்னம் தொடங்கப்பட்ட காலம் முதல் உடனிருக்கும் பலர் கலந்து கொண்டனர்.

மெக்னம் 1968இல் தொடங்கப்பட்டதிலிருந்து, உள்ளூர், அனைத்துலக நிலைகளில் பந்தயத் தொழில் துறைக்கான மகுடம் சூடி வந்துள்ளது. 1988 ஆம் ஆண்டு, மலேசியாவில் முதன் முறையாக 4D டிக்கெட் விற்பனையைக் கணினிமயமாக்கியதன் மூலம் விரைவான, நேர்மையான, நிலைத்தன்மையான சேவையை உறுதிப்படுத்தியது.

தொடர்ந்து 2009ஆம் ஆண்டு உலகத்திலேயே முதன்முதலாக 4D பந்தயத்துடன் ஜேக்போட்டை இணைத்து 4D ஜேக்போட் விளையாட்டை அறிமுகம் செய்தது.

இது மலேசியாவில் மிகவும் பிரபலமான இரண்டாவது பந்தய விளையாட்டாகவும் பிரபலமான ஜேக்போட் விளையாட்டாகவும் மாறியுள்ளது. இந்த வெற்றியைத் தொடர்ந்து மெக்னம் நிறுவனம் 2014ஆம் ஆண்டில் ஜேக்போட் கோல், 2016ஆம் ஆண்டில் பவர் பால் போன்ற ஜேக்போட் அம்சங்களை உள்ளடக்கிய பந்தய விளையாட்டுகளை அறிமுகம் செய்தது.

கடந்த 50 ஆண்டுகளின் சாதனைகளைத் திருப்பிப் பார்க்கும் பொழுது இதற்கு பக்கபலமாக அமைந்த அசைக்க முடியாத விசுவாசம், தொடர் ஆதரவு நல்கும் வாடிக்கையாளர்கள், நாடு தழுவிய முகவர்கள், வணிக நண்பர்களுக்கு மெக்னமின் தலைமைச் செயல் அதிகாரி டத்தோ லாரன்ஸ் லிம் சுவி லின் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அதே சமயத்தில், மெக்னமின் இலக்குகளை வாடிக்கையாளர்களுக்கும் சமுதாயத்திற்கும் சரியாகச் சென்று சேர்க்க அயராது உழைத்த சக ஊழியர்களையும் பாராட்டினார். அடுத்த அத்தியாயத்தின் ஒரு பகுதியாக மெக்னம் கடைகள் புதிய நிறுவன அடையாளத்திற்குப் பொருந்தும் வகையில் மாற்றியமைக்கப் படவுள்ளன. தொடர்ந்து இன்றைய சூழலையும் புதிய தலைமுறை வாடிக்கையாளர்களையும் கருத்தில் கொண்டு முடிவு செய்யப்பட்ட இந்தத் திட்டத்தை எங்கள் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று பெரிதும் நம்புகிறோம் என்று அவர் மேலும் விவரித்தார்.

Makkal Osai 10/01/2018